මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-011-2484500, (94)-011-2484600, (94)-011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: (94)-011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/02 - 2021
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2021.12.21

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல: 03/2021**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைகளின் செயலாளர்கள்
அனைவருக்கும்

**2022 செலவினத்திற்கான அங்கீகாரம் மற்றும் அரசாங்க செலவின முகாமை**

2022 நிதி ஆண்டுக்கான செலவின மதிப்பீட்டினை உள்ளடக்கிய 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2021 டிசெம்பர் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. 2022 நிதி வருடத்திற்குள் குறித்த சட்டத்திற்கேற்ப செலவினங்களை மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை இச் சுற்றுநிருபம் வழங்குகின்றது.

**02.** இதன் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் 2022 வருடாந்த மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை விஞ்சாத வகையில் குறித்த நிறுவனங்களின் செலவினங்களை மேற்கொள்ளல் மற்றும் கடப்பாடுகளில் ஈடுபடல் என்பவற்றில் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் செலவினம் தொடர்பான விடயங்களுடன் தொடர்புற்ற அலுவலர்கள் பொறுப்புடையவர்களாவர்.

**03. காலாண்டின் அடிப்படையில் செலவினங்களுக்கு அதிகாரமளித்தல்**

2022 நிதி ஆண்டுக்காக திரட்டிய நிதியிலிருந்து நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு காலாண்டு அடிப்படையில் ஆணைப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அதேவேளை, அதுதொடர்பாக வெளியிடப்பட்ட 02/2021 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபத்திற்கமைவாக ஒவ்வொரு செலவிடும் நிறுவனத்தினதும் காலாண்டு அடிப்படையிலான செலவினத்தினைத் திட்டமிடுதல் வேண்டும். இச்செலவினத் திட்டத்திற்கமைவாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கட்டு நிதியினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி 2022 இன் முதலாவது காலாண்டில் செலவினை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் அதிகாரத்தினை வழங்குவதற்காக அரசியலமைப்பின் 150(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நிதி அமைச்சரினால் உரிய ஆணைப்பத்திரத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், 2022 சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் மார்ச் மாதம் 31 ஆந் திகதி வரையான முதலாவது காலாண்டுக்குள் கொடுப்பனவு வவுச்சர் மற்றும் ஏனைய ஆவணங்களில் பின்வருமாறு உரிய அதிகாரம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) பொதுச் சேவைகள் - 2022 இன் பொது ஆணைப்பத்திர இல.1

(ஆ) விசேட சட்டச் சேவைகள் - 2022 இன் விசேட சட்ட ஆணைப்பத்திர இல.1

(இ) முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் - 2022 இன் முற்பண ஆணைப்பத்திர இல.1

**04. அரச செலவின முகாமைத்துவம்**

நிதிப் பிரமாணங்கள் 127 இற்கமைவாக அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்களும் தமக்குக் கீழுள்ள நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம் போதியளவு காணப்படுகின்றமை தொடர்பாக நிதி அமைச்சருக்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும். இந்த வகையில், ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதுடன் 2022 இற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் விபரமாகக் காணப்படும் வரையறைகளை விஞ்சாத வகையில் செலவினத்தினை முகாமை செய்யவேண்டியது பிரதான கணக்கீட்டு அலுவலர்களைப் போன்றே கணக்கீட்டு அலுவலர்களினதும் பொறுப்பு என்பது மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2022 நிதி வருடத்தின் போது அரச செலவின முகாமைத்துவம் சவால் நிறைந்ததாகக் காணப்படும் என்பதனால், செலவினக் கட்டுப்பாடானது மிகவும் கண்காணிக்கப்படுதல் வேண்டும். இந்த வகையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**04.1** 2022 வரவு செலவுத்திட்ட உரையில் நிதி அமைச்சரினால் முன்மொழியப்பட்டவாறு செலவினக் கட்டுப்பாடு தொடர்பான பின்வரும் முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

i. திரட்டு நிதியத்தினூடாக எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்படும் கௌரவ அமைச்சர்கள் / பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவினை மாதத்திற்கு 5 லீற்றர்களினால் அல்லது அதற்குச் சமனான பணத் தொகையினால் குறைத்தல்.

ii. அரசாங்க நிறுவனங்களின் தொலைபேசி செலவினங்களை நூற்றுக்கு 25 சதவீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. மின்சார செலவினத்தினை 10 சதவீதத்தினால் குறைப்பதற்கான வழிமுறையினைத் தயாரித்தல்.

iv. வரவுசெலவுத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டவாறு தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுவரும் அலுவலக கட்டிடங்கள் தவிர புதிய அலுவலகக் கட்டிடங்களை நிர்மாணித்தல் இரண்டு வருட காலத்திற்கு இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

v. 2022 வருடத்தின்போது அரசாங்க நிறுவனங்களுக்காக வாகனங்கள் கொள்வனவு இடைநிறுத்தப்படுதல் வேண்டும். (எவ்வாறாயினும், அத்தியவசிய பொதுச் சேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான அத்தியவசியப் பொருட்கள் மற்றும் காணி, வாகனங்கள் கொள்வனவு உரிய முறையில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்).

vi. நிறுவனமொன்றின் நலனுக்காக தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்காகவன்றி திரட்டு நிதியத்தின் செலவிலிருந்து புதிய பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்தல் இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

**04.2 இதற்கு மேலதிகமாக பின்வரும் செலவினக் கட்டுபாட்டு முறைமைகள் மேலும் செயற்படுத்தப்படுதல் வேண்டும்**

i. 2022 வருடத்திற்கான கலண்டர்கள், டயறிகள் மற்றும் குறிப்பு புத்தகங்கள் என்பவற்றை திரட்டிய நிதியினைப் பயன்படுத்தி அச்சிடக்கூடாது.

ii. புதிய கட்டிடங்கள் வாடகைக்கு பெறப்படமாட்டாது என்பதுடன் நிதி ஏற்பாடுகளற்ற நிலையில் பெறப்பட்ட கட்டிடங்களுக்காக வாடகைக் கொடுப்பனவுக்கான மேலதிக ஒதுக்கீடு வழங்கப்படமாட்டாது.

iii. உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி வெளிநாட்டுக் கற்கை சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்படக்கூடாது என்பதுடன் இலங்கையின் சார்பில் எவரேனும் அலுவலர் / அரச பங்குபற்றுகை அவசியமற்ற நிலையில் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி செயலமர்வுகள் / பயிற்சிப் பட்டறைகளில் அலுவலர்கள் பங்குபற்றுதலாகாது.

**04.3** செலவினக் கட்டுப்பாடு தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட இல. 05/2019 மற்றும் 07/2019 வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபங்கள் இந்த சுற்றுநிருபத்தின் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றன.

**04.4** தற்பொழுது செயற்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களுக்கான கையிலுள்ள அல்லது தீர்க்கப்படாத நிலுவைச் சிட்டைகளுக்கான கொடுப்பனவுகளுக்கு ஒதுக்கீடுகளின்றி புதிய கருத்திட்டங்கள் எதனையும் ஆரம்பித்தல் கூடாது.

**04.5** காலாண்டு அடிப்படையில் ஆணைப்பத்திரங்கள் விநியோகித்தல் மற்றும் அர்ப்பணிப்பு முகாமைத்துவம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2021.12.06 ஆந் திகதிய 2/2021 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களும் 2022 செலவினங்களை மேற்கொள்ளும் போது பிரயோகித்தல் வேண்டும்.

**04.6** வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்படாத வர்த்தக இயல்பைக் கொண்ட அரச நிறுவனங்கள் தமது செலவினத்தினை ஈடு செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும் என்பதுடன் வருமானப் பற்றாக்குறையினை கவனத்திற் கொண்டு திறைசேரிக்கு எவ்வித நிதி ஏற்பாடுகளுக்கான வேண்டுகோளும் விடுக்கப்படுதலாகாது. வரவு செலவுத்திட்டத்தினூடாக நிதியளிக்கப்படுகின்ற அரச நிறுவனங்கள் அவற்றுக்கு வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டு வரையறைக்குள் அர்ப்பணிப்புகளை முகாமை செய்தல் வேண்டும். கட்டு நிதியானது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டு வரையறைக்குள் மாத்திரம் விடுவிக்கப்படுவதுடன் மூலதனச் செலவினத்திற்கான முன்அங்கீகாரத்தினை எவ்வித தாமதமுமின்றிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**04.7** அவ்வாறான வரையறை காரணமாக வெளிநாட்டு நிதியளிப்பின் மூலம் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களின் தொடரான செயற்பாட்டுக்கு எவ்வித பாதகமுமின்றி திட்டங்களை தயாரித்தல் வேண்டும். அவ்வாறான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் செயலாற்றுகை ஏதேனும் வரையறை மூலம் தடைப்படுமாயின், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் எவ்வித தாமதமுமின்றி திறைசேரிக்கு அறிவித்து தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## 05. 2022 வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

2022 வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் என்பன 2/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் 03 மற்றும் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தல் தொடர்பாக குறிப்பிடுவதன் மூலம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கான அனுமதியும் பெறப்படுதல் வேண்டும்.

2022 வருடத்தின்போது நிதி விடுவிப்பானது காலாண்டு வரையறைக்குள் இடம்பெற இருப்பதனால், வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் 02/2021 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய காலாண்டு நிதியேற்பாட்டு வரையறைக்குள் இடம்பெறும் என்பதனைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

## 06. வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள்

2022 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவது தொடர்பாக திறைசேரிச் செயலாளரின் 2021.11.23 ஆந் திகதிய MF/NP/Gen/2020/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தற்பொழுது ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதனால் அதன்படி செயற்படுதல் வேண்டும்.

தற்பொழுது உரிய அனுமதியினைப் பெற்றுள்ள, 2022 மதிப்பீட்டிற்குள் நிதி ஏற்பாட்டினை உள்ளடக்கியுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை காணப்படுமாயின் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த முன்னர் அதற்கான உரிய நிதி ஏற்பாடு கண்டறியப்படுதல் வேண்டும்.

## 07. மேலதிக ஒதுக்கீட்டிற்கான கோரிக்கைகள்

2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு 2022 நிதி வருடத்தின்போது புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள் அல்லது அரசாங்க நிறுவனங்களினால் மேலதிக ஒதுக்கீடுகளுக்கான கோரிக்கைகள் விடுக்கப்படமாட்டாது.

## 08. நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழ் ஒதுக்கீட்டினை மாற்றுதல்

முதலாவது காலாண்டில் இப் பிரிவுகளின் கீழ் நிதி ஏற்பாடுகளை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விசேட காரணங்களுக்காக மாத்திரம் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 என்பவற்றின் கீழ் நிதி ஏற்பாடுகளை மாற்றுதல் 2022 முழு நிதி வருடத்திற்குமாக கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நிதிப் பிரமாணம் 65(4) இல் குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டவகையில் நிதி ஏற்பாட்டினை மாற்றுதல் வேண்டும் என்பதுடன் **அனைத்து சந்தர்ப்பத்திலும் நிதி ஏற்பாட்டுப் பற்றாக்குறை மற்றும் சேமிப்புகள் தொடர்பான தெளிவான காரணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.**

## 09. முற்பணக் கணக்கு நடவடிக்கைகள்

ஒவ்வொரு காலாண்டின் போதும் செலுத்தப்பட வேண்டிய முற்பணங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். (உதாரணமாக: விசேட முற்பணம் – முதற் காலாண்டு, பண்டிகை முற்பணம் – இரண்டாவது காலாண்டு) முற்பணக் கணக்கு செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் காலாண்டு அடிப்படையில் திட்டமிடப்படுதல் வேண்டும்.

முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான ஆகக்கூடிய செலவின வரையறையினை அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் காலத்திற்குக் காலம் தேவையான மீளாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரையறைக்குள் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உரிய அலுவலர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**10. <u>தெளிவுபடுத்தல்கள்</u>**

இந்த சுற்றுநிருபம் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தில் உங்களது அமைச்சு / திணைக்களம் / நிறுவனத்திற்குப் பொறுப்பான உரிய அலுவலரினை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/**
**எஸ்.ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு